**<u>மதுக்கரை நகராட்சியில் 08.04.2022ம் நாள் நடைபெற்ற அவசர மன்றக்கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்.</u>**

## மன்றப் பொருள் எண்.1

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15—ஆவது மத்திய நிதி ஆணையம், 2022—2023—ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019—ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு **2022–2023** முதலாம் அரையாண்டு **(01.04.2022)** முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு **4** வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.**52** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் **30.03.2022** மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.**40032/2012**/ஆர்1, நாள்.**01.04.2022** ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) **600** சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) **601** முதல் **1200** சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) **1201** முதல் **1800** சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டடுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் மதுக்கரை நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities)(ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம்/ குடிநீர் கட்டணம் | 1) மின் கட்டணம் – 0.19 கோடி<br>2) குடிநீர் கட்டணம் – 0.12 கோடி |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 3) நூலகவரி – 0.12 கோடி<br>4) வருமானவரி – 0.09 கோடி<br>5) ஜி.எஸ்.டி – 0.03 கோடி |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 6) டுஃபிட்கோ கடன் – 0.04 கோடி |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை | 7) சேமநலநிதி – 0.02 கோடி<br>8) சேமநலநிதி வட்டி – 0.33 கோடி<br>9) நகராட்சி பங்குதொகை – 0.03 கோடி<br>10) டீசல் மற்றும் பெட்ரோல் – 0.01 கோடி<br>11) சம்பள பிடித்தம் – 0.08 கோடி |

| | | |
|---|---|---|
| | மற்றும் பிற பணப்பயன்கள் (நிலுவைத் தொகை) | |
| | **மொத்தம்** | **1.06 கோடி** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், மதுக்கரை நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு மண்டலங்கள் நிர்ணயம் செய்யலாம்.

| வ.எண். | வார்டு எண். | தெருவின் பெயர் | மண்டலம் |
|---|---|---|---|
| 1 | 1 | தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்பு | C |
| 2 | 3 | ஜெ.ஜெ. நகர் 4,5,6வது வீதி | B |
| 3 | 5 | நேரு வீதி | B |

| | | | |
|---|---|---|---|
| 4 | 8 | திருவள்ளுவர் வீதி | B |
| 5 | 9 | மாகாளியம்மன் கோவில் வீதி | B |
| 6 | 9 | வாழைத்தோட்டம் | B |
| 7 | 9 | மாந்தோப்பு தோட்டம் | B |
| 8 | 9 | பாறைக்காடு | B |
| 9 | 9 | கால்வாய் தோட்டம் | B |
| 10 | 9 | ராஜாபிருந்தாவன் நகர் ஃபேஸ் 1, 2 | B |
| 11 | 10 | மெகா சிட்டி | A |
| 12 | 13 | தண்டபாணி தோட்டம் | C |
| 13 | 13 | வஞ்சியம்மன் கோவில் வீதி | A |
| 14 | 13 | நிகில் கார்டன் | A |
| 15 | 13 | ஷீபா நகர் | A |
| 16 | 14 | அன்னை நகர் | B |
| 17 | 14 | ஜெ.ஜெ.நகர் 1,2,3வது வீதிகள் | B |
| 18 | 20 | மயில் நகர் | A |
| 19 | 22 | குரு கார்டன் | B |
| 20 | 23 | தோப்பு தோட்டம் | C |
| 21 | 23 | உப்புபாறை தோட்டம் | C |
| 22 | 23 | நடராஜ் கவுண்டர் தோட்டம் | B |
| 23 | 23 | ஸ்ரீ என்கிளேவ் ஃபேஸ் 3 | A |
| 24 | 23 | கோவை ஆட்டோமொபைல் நகர் | A |
| 25 | 23 | என்.எம்.சி. பூங்கா நகர் | B |
| 26 | 25 | லீபோனிக்ஸ் கார்டன் | A |
| 27 | 25 | எம்.எஃப் கார்டன் | A |
| 28 | 25 | சிருஷ்டி என்கிளேவ் ஃபேஸ் 1, 2 | A |
| 29 | 25 | கிரீன் பார்க், பிரிமியர் காலனி | A |
| 30 | 26 | மணக்காடு தோட்டம் | B |
| 31 | 26 | சிவசக்தி கார்டன் ஃபேஸ் 1, 2 | A |
| 32 | 27 | எம்.எல்.ஏ வீதி | B |
| 33 | 27 | ஸ்ரீ ராம் ஸ்ரேஷ்டா 1,2 | A |
| 34 | 27 | எலைட் ஸ்ரீராம் ஸ்ரேஷ்டா | A |

மேற்காணும் விபரத்திற்கு மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள புதிய சாலைகள், தெருக்கள், சந்துக்களை மண்டலங்களில் வகைப்படுத்தி சொத்துவரி நிர்ணயிக்கவும் மதுக்கரை பேரூராட்சி மன்றத்தீர்மானம் எண்.137 நாள்.16.10.2018ன்படி சொத்துவரி சீராய்வுக்காக ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட மூன்று மண்டலங்களுக்கான கீழ்காணும் அடிப்படை மதிப்பின்படி 01.04.2022 முதல் உயர்த்தப்பட்ட அடிப்படை மதிப்பினை பின்பற்றவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | மண்டலம் | தற்போதுள்ள மதிப்பு (ஒரு சதுரடிக்கு) | உயர்த்தப்பட்ட மதிப்பு (ஒரு சதுரடிக்கு) |
|---|---|---|---|
| 1 | அ மண்டலம் (A Zone) | 0.75 | 1.20 |
| 2 | ஆ மண்டலம் (B Zone) | 0.60 | 1.00 |
| 3 | இ மண்டலம் (C Zone) | 0.50 | 0.80 |

( ந.க. எண்: 0456 /2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அரசாணை நிலை எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) நாள்.30.03.2022ன் அரசாணையை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
3. அரசாணை நிலை எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.03.2022ன்படியும் அரசு செய்தி வெளியீடு எண்.519 நாள்.01.04.2022ன்படியும் மதுக்கரை நகராட்சி பகுதியில் வாழும் பொதுமக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் படிப்படியாக நிறைவேற்றும் பொருட்டு இந்நகராட்சியின் நிதி ஆதாரத்தினை உயர்வுபடுத்தும் வகையில் சொத்துவரி சீராய்வு பணியை நடைமுறைப்படுத்தி நகராட்சியின் நிதி ஆதாரத்தை உறுபடுத்த 2022–2023ம் நிதியாண்டின் முதல் அரையாண்டான 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வு (General Revision of Property Tax) மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.28</u>**

1. மண்டலங்களின் வரிசை எண்.9க்கு கால்வாய் தோட்டப்பகுதியினை ‘அ’ மண்டலமாக திருத்தம் செய்து அனுமதிக்கப்பட்டது.
2. அரசாணை மன்றத்தில் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.
3. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.2

1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 129 ன் படி மன்றமானது இல்லப்பயன்பாட்டிற்கு நீர் வழங்குதல் ( Council to provide water for domestic use) படி நகராட்சி மன்றமானது தனது இருப்பில் உள்ள நிதியம் அனுமதிக்கும் வரை குடியிருப்பவர்களின் இல்லப்பயன்பாட்டிற்கு தகுந்தவாறான நீரினை போதுமான அளவு வழங்கிட வகை செய்திடவேண்டும் என சட்டத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மதுக்கரை நகராட்சியின் தற்போதைய 27 வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள், நகர் மன்றத் துணைத்தலைவர் மற்றும் நகர் மன்றத்தலைவர் ஆகியோர்களின் கோரிக்கையின் படி தற்போது நிலவும் கோடைகாலத்தில் ஏற்படும் தண்ணீர் பற்றாக்குறையை சரிசெய்யும் விதத்தில் நகரின் அனைத்து

வார்டுகளிலும் பொதுமக்களுக்கு தட்டுப்பாடின்றி தண்ணீர் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது.தற்போதுள்ள பொது மக்களுக்கான தண்ணீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு கீழ்காணும் இடங்களில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மேட்டார் பொருத்தி தேவையான பகுதிகளுக்கு பகிர்மானக் குழாய்கள் பதித்து பொதுக்குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது.

புதிதாக ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட வேண்டியதன் வேலைப்பட்டியல் மற்றும் மதிப்பீடுகள் விபரம்

| வ. எண் | பொது வேலை விபரம் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| 1 | மதுக்கரை நகராட்சி 3 வது வார்டு காந்தி சதுக்கம், 4வது வார்டு பாரதியார் சதுக்கம், 5 வது வார்டு கருப்பராயன் கோவில் தெரு, 7 வது வார்டு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி அருகில், 8 வது வார்டு டீச்சர் காலனி ஆகிய பகுதிகளில் புதிதாக ஆழ்துளை கிணறுகள் அமைத்து மின் மோட்டார்கள் பொருத்தி தேவையான இடங்களுக்கு பகிர்மான குழாய்கள் பதித்து பொது குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்தல் | 9.90 லட்சம் |
| 2 | மதுக்கரை நகராட்சி 9 வது வார்டு வடபழனி கோவில் அருகில், 9 வது வார்டு ஸ்ரீராம் நகர் அருகில் , 10 வது வார்டு சென்னை சில்க்ஸ் அருகில், 10 வது வார்டு மெகாசிட்டி பகுதி , 27 வது வார்டு அட்லாண்டிக் நகர் ஆகிய பகுதிகளில் புதிதாக ஆழ்துளை கிணறுகள் அமைத்து, மின்மோட்டார்கள் பொருத்தி தேவையான இடங்களுக்கு பகிர்மானக் குழாய்கள் பதித்து பொதுக்குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்தல். | 9.90 லட்சம் |
| 3 | மதுக்கரை நகராட்சி 14 வது வார்டு அன்னை நகர் பகுதி, 15 வது வார்டு சார்பதிவாளர் அலுவலகம் அருகில் , 17 வது வார்டு விநாயகர் கோவில் வீதி, 18 வது வார்டு சரஸ்வதி நகர் பகுதி , 19வது வார்டு பாடசாலை வீதி ஆகிய பகுதிகளில் புதிதாக ஆழ்துளை கிணறுகள் அமைத்து, மின்மோட்டார்கள் பொருத்தி தேவையான இடங்களுக்கு பகிர்மானக்குழாய்கள் பதித்து பொதுக் குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்தல் | 9.90 லட்சம் |
| 4 | மதுக்கரை நகராட்சி 20 வது வார்டு ஊத்துமாரியம்மன் கோவில் அருகில், 21 வது வார்டு முஸ்லீம் காலனி பகுதி , 22 வது வார்டு குருகார்டன் அருகில், 23 வது வார்டு ராஜீவ் காந்தி நகர் பகுதி, 23வது வார்டு தர்மராஜா நகர் பகுதி ஆகிய பகுதிகளில் புதிதாக ஆழ்துளை கிணறுகள் அமைத்து, மின்மோட்டார்கள் பொருத்தி தேவையான இடங்களுக்கு பகிர்மானக்குழாய்கள் பதித்து பொதுக்குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்தல் | 9.90 லட்சம் |
| 5 | மதுக்கரை நகராட்சி 24 வது வார்டு சியோன் பருவதம் சர்ச் அருகில், 24 வது வார்டு மேட்டாங்காடு பார்க் பகுதி , 24 வது வார்டு எம்.ஜி.ஆர் நகர் பகுதி , 25 வது வார்டு கலைவாணி பள்ளி பின்புறம் 27 வது வார்டு முனியப்பன் கோவில் அருகில் ஆகிய பகுதிகளில் புதிதாக ஆழ்துளை கிணறுகள் அமைத்து மின்மோட்டார்கள் பொருத்தி தேவையான இடங்களுக்கு பகிர்மானக் குழாய்கள் பதித்து பொதுக் குழாய்கள் மூலம் | 9.90 லட்சம் |

| | | |
|---|---|---|
| | தண்ணீர் விநியோகம் செய்தல் | |
| | **மொத்தம்** | **49.50 லட்சம்** |

மேற்கண்ட விபரத்திற்கு தண்ணீர் வழுங்களை ஐந்து வேலைகளாக பிரித்து 25 இடங்களில் மொத்த செலவின மதிப்பீடு ரூ.49.50 லட்சம் செலவினத்தை குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மேற்காணும் பணிகளை திறந்த ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க. எண்: 483 /2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

நகர் மன்றத் தலைவர், நகர் மன்றத் துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகர் மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையினை ஏற்று பொதுமக்களுக்கு மிகவும் அத்தியாவிஷயமாக தேவைப்படும் தண்ணீரை காலதாமதமின்றி விநியோகம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க. எண்: 0456 /2022/அ1)

**<u>தீர்மானம் எண்.29</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

இடம் : மதுக்கரை
நாள் : 08.04.2022

நகர் மன்றத்தலைவர்
மதுக்கரை நகராட்சி

---